இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 11-10-2025

# சமத்துவத்தை உருவாக்கும் அரசு ஆணை!

சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழாவில் உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "மானமிகு ஆசிரியர் அவர்கள் உருவாக்கிக் கொடுத்துள்ள தீர்மானங்களை சமூகக் களத்தில் நீங்கள் பரப்புரை செய்யுங்கள். திராவிட முன்னேற்றக் கழகமானது ஆட்சியைப் பயன்படுத்தி சட்டங்களாக, விதிமுறைகளாக, நெறிமுறைகளாக வகுப்போம்" என்று உறுதி அளித்தார்கள். நேற்றைய தினம் வெளியாகி உள்ள அரசு ஆணை, இதனை மையப்படுத்தியதாக இருக்கிறது.

**மாநிலம் முழுவதும் உள்ள தெருக்கள், சாலைகள், வருவாய் கிராமங்களின் பெயர்களில் உள்ள சாதிப் பெயர்களை நீக்கி மறுபெயரிடுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. இந்த அரசாணை, சமத்துவத்தை உருவாக்கும் பயணத்தில் ஒரு மைல் கல் ஆகும்.**

சாதி, மதம், பாலினம், செல்வம், அதிகாரம் போன்ற எந்தவொரு காரணத்தாலும் வேறுபாடு இல்லாத, சம வாய்ப்புகள் கொண்ட ஒரு நியாயமான மற்றும் முன்னேற்றமிக்க சமத்துவ சமூக அமைப்பை நோக்கி பல்வேறு திட்டங்கள், பணிகள், கொள்கை முன்னெடுப்புகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருவதாக இந்த அரசாணை உறுதி அளிக்கிறது.

அனைத்துத் தரப்பு மக்களும் மதிப்போடும், சமமாகவும் நடத்தப்படும் போது மட்டுமே உண்மையான சமத்துவ சமூகத்தை கட்டியெழுப்ப முடியும் என்ற அடிப்படையில் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருவதை இந்த அரசு ஆணை உறுதி செய்கிறது.

கடந்த ஏப்ரல் 29-ஆம் தேதி சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார். "ஆதிக்கத்தின் அடையாளமாகவும், தீண்டாமைக்கான குறியீடாகவும் வசைச் சொல்லாக மாறியிருப்பதால் 'காலனி' என்ற சொல் அரசு ஆவணங்களில் இருந்தும், பொதுப் புழக்கத்திலிருந்தும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அறிவித்தார்கள். இதன் தொடர்ச்சியாக இந்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் காலனி, ஹரிஜன் குடியிருப்பு, வண்ணான்குளம், பறையர் தெரு, சக்கிலியர் தெரு போன்ற பெயர்கள் உறுதியாக மாற்றப்பட வேண்டும். குளம் மற்றும் நீர் நிலைகளுக்கு பூக்களின் பெயர்களையும், தெருக்கள் மற்றும் சாலைகளுக்கு தமிழ் அறிஞர்கள் மற்றும் தலைவர்கள் பெயர்களையும் சூட்ட வேண்டும். இந்தப்பணிகளை நவம்பர் 19ஆம் தேதிக்குள் முடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சாதிச் சான்றிதழ்கள் மற்றும் ஆதார் அட்டையில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலமாக முகாம்கள் நடத்தப்பட வேண்டும் என்றும், குடும்ப அட்டையில் திருத்தங்கள் மேற்கொள்ள ELCOT மூலமாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

குடியிருப்புகள், சாலைகள், தெருக்கள், பேருந்து நிலையங்கள், சந்தைகள், நீர்நிலைகள் போன்ற பொது உட்கட்டமைப்புகள் ஆகியவற்றில் சாதிப் பெயர்கள் இடம் பெறாத வகையில் திருத்தங்கள் செய்யலாம் என்றும் பதிவுத்துறைக்கு தமிழ்நாடு அரசு அறிவுறுத்தி உள்ளது.

'சாதியை மறுத்தல்' என்பதன் முதல்படி, சாதி அடையாளங்களைத் தவிர்த்தல் ஆகும். அதனைத்தான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் செய்து காட்டி வருகிறார்கள்.

ஏற்கனவே சாதிப் பெயர் தாங்கிய பள்ளி, கல்லூரி விடுதிகளின் பெயர்கள் நீக்கப்பட்டு அவை 'சமூகநீதி விடுதிகள்' என ஆக்கப்பட்டுள்ளன. இதன்மூலமாக அந்த அடையாளச் சொல்லை வைத்து இழிவு செய்வது தவிர்க்கப்படுகிறது.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நேரில் சந்தித்து பல்வேறு கோரிக்கைகளை வைத்த முதல் அமைச்சர் அவர்கள், அதில் வைத்த மிக முக்கியமான கோரிக்கையும் இது தொடர்பானது ஆகும்.

**"தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பங்காக (1/5) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் உள்ளனர், தமிழ்நாட்டின் சாதிப் பெயர் பட்டியலில் 76 ஆதிதிராவிடர் சாதிப் பெயர்களும், 37 வகையான பழங்குடியினர் சாதிப் பெயர்களும், அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகங்களைச் சேர்ந்த பெரும்பான்மை யான மக்கள் தங்கள் சாதிப் பெயரில் இறுதி எழுத்து 'N' மற்றும் 'A' என முடிவதால், சாதிப் பெயரை ஒருமையுடன் குறிப்பிடுவதாக இருப்பதாகவும் எனவே சமூகத்தில் உரிய பெருமை கிடைக்கப் பெறவில்லை எனவும் கூறி 'N' மற்றும் 'A' என்பதற்குப் பதிலாக 'R' எனப் பெயர் மாற்றம் செய்து தங்களுக்கு உரிய மரியாதையைப் பெற்றுத் தருமாறு அரசிடம் கோரிக்கை வைத்த வண்ணம் உள்ளனர். தமிழ்நாடு அரசு மேற்காணும் சாதிகளில் உரிய பெயர் மாற்றம் செய்ய சட்டமியற்றுமாறு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது"** என்பதுதான் பிரதமரிடம் முதல்வர் வைத்த கோரிக்கை ஆகும்.

ஊரின் பெயர், தெருவின் பெயர், சாலையின் பெயர், பள்ளியின் பெயர், விடுதியின் பெயர் ஆகியவை மூலமாக சாதியை அடையாளப்படுத்தி இழிவு செய்தல் இனியும் தொடரக் கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நினைக்கிறார்கள்.

**'சமூகரீதியாக' பகை கொள்வதைத் தடுத்தாலே 90 விழுக்காடு சாதிச் சண்டைகள் முடிவுக்கு வந்துவிடும் என்பதே உண்மை. அதற்கு 'சமூகரீதியாக' அடையாளப்படுத்துதல், அடையாளம் காணுதல் ஆகியவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதனைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்துள்ளார்கள்.**



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சேலம் கோட்டம் சார்பில் மலைவழித்தடங்களில் புதிய புறநகர் பேருந்துகள் மற்றும் நகர பேருந்துகள் வழித்தட மாற்றம் மற்றும் வழித்தட நீட்டிப்பு பேருந்து சேவைகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் நேற்று (10.10.2025) சேலம், புதிய பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி., டி.எம்.செல்வகணபதி எம்.பி., மேயர் ஆ.இராமச்சந்திரன், வெ.குணசேகரன், த. மோகன்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில்

# 'கலைமாமணி விருதுகள்' - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கிச் சிறப்புரையாற்றுகிறார்!

## சென்னை கலைவாணர் அரங்கில் இன்று விழா!

சென்னை, அக்.11-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாளை 2021, 2022, 2023-ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் மற்றும் சிறப்பு விருதுகளை யும் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் கலைமாமணி விருது வழங்கும் விழா இன்று (11.10.2025 - சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறுகின்றது.

இவ்விழாவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று விருதுகள் வழங்கி, மலர் வெளியிட்டு விழாப் பேருரையாற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் - தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் உறுப்பினர் - செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில் 2021, 2022 மற்றும் 2023-ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதும், சிறப்பு விருதுகளாக பாரதியார் (இயல்) விருது முனைவர் ந.முருகேச பாண்டியன் அவர்களுக்கும், எம்.எஸ்.சுப்புலட்சுமி (இசை) விருது பத்ம விபூஷண் டாக்டர் கே.ஜே.யேசுதாஸ் அவர்களுக்கும், பால சரஸ்வதி (நாட்டியம்) விருது பத்மஸ்ரீ முத்து கண்ணம்மாள் அவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

இவ்விழாவில் அமைச்சர்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாலை 4 மணிக்கு "உருபாணர்" இசைக் குழுவினரின் யாழ் இசை நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

## கரூர் துயரச் சம்பவம் குறித்து உயர்நீதிமன்றம் நியமித்த சிறப்பு புலனாய்வுக் குழு விசாரித்து வருவதால்

# சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டிய அவசியமில்லை!

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வாதம்!

புதுடெல்லி, அக். 11-

கரூரில் விஜய் பிரச்சாரக் கூட்டத்தில் 41 பேர் உயிரிழந்த துயரச் சம்பவம் தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, கரூர் துயரச் சம்பவத்தில் சிறப்பு புலனாய்வுக் குழு முழுமையான விசாரணையை நடத்தி வருவதாக, தமிழ்நாடு அரசு சார்பில் வாதிட்ட மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் தெரிவித்தார்.



விஜய் பிரச்சாரக் கூட்டத்தில் 41 பேர் உயிரிழந்தது மிகவும் கொடூரமானது என்றும், குறிப்பிட்ட இடத்தில் 12 மணிக்கு வருவதாக கூறி விட்டு விஜய் மிக தாமதமாக வந்ததால் விபத்து நேரிட்டதாக அவர் கூறினார். மேலும், கரூர் துயரச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களையும், உயிரிழந்தவர்களின் உறவினர்களையும் இதுவரை நேரில் சென்று விஜய் பார்க்கவில்லை என்றும் அரசுவழக்கறிஞர்குற்றம்சாட்டினார்.

இந்த துயரம் சம்பவம் குறித்து விசாரிக்க உயர்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரி அஸ்ரா கார்க், முன்னாள் சி.பி.ஐ. அதிகாரி என்பதால் விசாரணை முறையாக நடைபெறும் என்று தமிழ்நாடு அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் முகுல் ரோத்தகி தெரிவித்தார்.

இதையடுத்து, வழக்கு பிற்பகலுக்கு ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் விசாரணைக்கு வந்தது.

இதேபோல், தமிழ்நாடு அரசு சார்பில் ஆஜரான மற்றொரு மூத்த வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி, உயர்நீதிமன்றம் திறமையான அதிகாரி தலைமையில் சிறப்பு புலனாய்வு குழுவை அமைத்துள்ளது என்றும், எனவே சி.பி.ஐ விசாரணை தேவை இல்லை என்று வாதிட்டார். அனைத்து வழக்குகளையும் சி.பி.ஐ., விசாரணைக்கு அனுப்பக்கூடாது என்றும், அரிய வழக்குகளை மட்டுமே சூழ்நிலைகளுக்கு ஏற்ப பரிந்துரைக்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வின் தீர்ப்பு உள்ளதாக சுட்டிக்காட்டினார்.

ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் மற்றொரு விசாரணையும் நடைபெற்று வருகிறது என்பதை அவர் சுட்டிக்காட்டினார். இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அனைவரின் வலியையும் தமிழ்நாடு அரசு அறிந்துள்ளது என்றும் அவர் கூறினார். கள நிலவரங்கள் அனைத்தையும் அறிந்தவர்கள் தமிழ்நாடு அரசின் அதிகாரிகள், எனவே ஒரு சிறந்த அதிகாரியின் தலைமையில் அமைக்கப்பட்ட இந்த சிறப்பு விசாரணை குழுவில் கரூர் சம்பவம் தொடர்பான விசாரணை தொடர வேண்டும்.

இவ்வாறு பல வழக்குகளை தொடர்ச்சியாக மாற்றிக் கொண்டிருந்தால் சிபிஐ முன்பு அதிக அளவிலான வழக்குகள் குவிந்து கிடக்கும். ஆனால் சிபிஐக்கு இருப்பதோ குறைந்த அளவிலான அதிகாரிகள்தான் என்று அபிஷேக் சிங்வி தெரிவித்தார்.

மாவட்ட நிர்வாகத்தின் சிறப்பு அனுமதியுடன் உடற்கூறு ஆய்வு இரவில் நடத்தப்பட்டது என்றும் கூறினார். அப்போது, மாவட்ட நிர்வாகத்தின் சிறப்பு அனுமதி மற்றும் உத்தரவின் அடிப்படையில் இரவில் உடற்கூறு ஆய்வு நடைபெறுவது வழக்கம் தான் என்று நீதிபதிகள் தெரிவித்தனர். 220 மருத்துவர்கள் அழைக்கப்பட்டு பல்வேறு மருத்துவமனைகளில் உடற்கூறு ஆய்வுகள் நடத்தப்பட்டது. போலீசார் பெருமளவுக்கு பாதுகாப்புக்கு நியமிக்கப்பிட்டிருந்தனர்.

நடிகர் என்பதால் மக்கள் கூட்டம் குவிந்தது. காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை உணவு, குடிநீர் இல்லாமல் மக்கள் மயங்கி விழுந்துள்ளனர். பேருந்திலிருந்து குடிநீரை வீசி எரிந்துள்ளனர் என்று தமிழ்நாடு அரசின் வழக்கறிஞர் வில்சன் தெரிவித்தார்.

கரூர் சம்பவம் தொடர்பாக சரியான தரவுகள் மற்றும் ஆதாரங்கள் பிரமாண பத்திரமாக தாக்கல் செய்யப்படவுள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்தது. இதனை ஏற்ற உச்சநீதிமன்றம் வழக்கை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்து உத்தரவிட்டது.

## மண்டலம் - 6 புரசைவாக்கத்தில் பராமரிப்புப் பணி:

# கழிவு நீரிறைக்கும் நிலையம் செயல்படாது!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, அக்.11-

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கணேசபுரம் வியாசர்பாடி ஜீவா ரயில் நிலைய சுரங்க பாதை மேம்பால கட்டுமான பணிகளுக்காக, டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சாலையில் உள்ள 1050 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் பிரதான உந்து குழாய் மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் 14.10.2025 அன்று பிற்பகல் 2 மணி முதல் 15.10.2025 அன்று இரவு 8 மணி வரை (30 மணி நேரம்) மண்டலம்-6-க்குட்பட்ட புரசைவாக்கம் கழிவு நீரிறைக்கும் நிலையம் தற்காலிகமாக செயல்படாது.

எனவே, இராயபுரம், திரு. வி.க நகர், அண்ணா நகர், தேனாம்பேட்டை மண்டலங்களுக்குட்பட்ட இடங்களில் கழிவுநீர் தொடர்பான புகார்களுக்கு கீழ்க்காணும் பகுதி அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

வ. எண் மண்டலம் பகுதிப் பொறியாளர் / துணை பகுதிப் பொறியாளர் கைபேசி எண்கள் பகுதிகள் 1. மண்டலம் -5 (இராயபுரம்) 8144930905 8144930255 லாங்ஸ் கார்டன், நேப்பியர் பூங்கா, வால்டாக்ஸ் சாலை 2. மண்டலம் - 6 (திரு.வி.க நகர்) 8144930906 8144930216 8144930217 அயனாவரம், ஏகாங்கிபுரம், பெரம்பூர், செம்பியம் 3. மண்டலம் - 8 (அண்ணா நகர்) 8144930908 8144930258 சேத்துப்பட்டு, சாஸ்திரி நகர், கீழ்ப்பாக்கம், சுந்தரம் தெரு, ஷெனாய் நகர், ஓசான்குளம் 4. மண்டலம் - 9 (தேனாம்பேட்டை) 8144930909 8144930111 கிரீம்ஸ் சாலை

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.




கோவாவில், கோமன்தக் செய்தி நிறுவன ஏற்பாட்டில் நடைபெற்ற தேசிய தென்னை மாநாட்டில், நேற்று (10.10.2025) வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கலந்து கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தென்னை விவசாயத்திற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மேற்கொள்ளப்படும் பல்வேறு பணிகள் குறித்து எடுத்துரைத்தார். மேலும், விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்பட தமிழ்நாடு மற்றும் கோவா மாநிலம் இடையே வேளாண் விளை பொருட்கள் சந்தைப்படுத்துதல் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது. இம்மாநாட்டில், கோவா மாநில முதலமைச்சர் பிரமோத் சாவந்த் மற்றும் அம்மாநில அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.